## ஜனவரி – 13 – சனி

### புனித ஹில்லரி

**அவர் உள்ளம் விரும்பியதை நீர் அவருக்குத் தந்தருளினீர்: திபா. 21:2**

-------------------------------------------------------------------

### முதல் வாசகம்: 1 சாமுவேல் 5: 1 – 4,17 –19:10 : 1

அந்நாள்களில் பென்மியன் குலத்தில் கீசு என்ற ஆற்றல்மிகு வீரர் ஒருவர் இருந்தார். அவர் பென்மியனின் அபியாவுக்குப் பிறந்த பெக்கோராத்தின் மகனான செரோரின் மகன் அபியேலுக்குக் பிறந்தவர். அவருக்குச் சவுல் என்ற ஓர் இளமையும் அழகும் கொண்ட மகன் இருந்தார். இஸ்ரயேலின் புதல்வருள் அவரைவிட அழகு வாய்ந்தவர் எவரும் இலர். மற்ற அனைவரையும் விட அவர் உயரமானவர். மற்ற அனைவரும் அவர் தோள் உயரமே இருந்தனர். சவுலின் தந்தை கீசின் கழுதைகள் காணாமற் போயின. கீசு தம் மகன் சவுலை அழைத்து, ”பணியாளன் ஒருவனை உன்னோடு கூட்டிக் கொண்டு கழுதைகளைத் தேடிப்போ என்றார். அவர் எப்ராயிம் மலைநாட்டையும் சாலிசா பகுதியையும் கடந்து சென்றார். அவற்றைக் காணவில்லை சாலிம் நாட்டு வழியே சென்றார். அங்கும் அவை இல்லை. பென்யமின் நாட்டைக் கடந்து சென்றார். அங்கும் அவை தென்படவில்லை. சாமுவேல் சவுலை கண்டதும் ஆண்டவர் அவரிடம் ”இதோ நான் உனக்குச் சொன்ன மனிதன்! இவனே என் மக்கள் மீது ஆட்சிபுரிவான்” என்றார். சவுல் வாயிலின் நடுவே சாமுவேலை நெருங்கி, திருக்காட்சியாளரின் வீடு எங்கே? தயைகூர்ந்து சொல்லும்” என்று கேட்டார். சாமுவேல் சவுலுக்கு கூறியது ”நானே திருக்காட்சியாளன். எனக்கு முன்பாக தொழுகை மேட்டுக்குச் செல். இன்று நீ என்னோடு உண்ண வேண்டும். உன் உள்ளத்தில் இருப்பது அனைத்தையும் நாளைக் காலையில் நான் உனக்கு எடுத்துரைத்து உன்னை அனுப்பிவிடுகிறேன். அப்போது சாமுவேல் தைலக் குப்பியை எடுத்து, அவர் தலைமீது வார்த்து அவரை முத்தமிட்டு கூறியது ”ஆண்டவர் நம் உரிமைச் சொத்துக்கு தலைவனாக இருக்கும் படி உன்னைத் திருப்பொழிவு செய்துள்ளார் அன்றோ?

### நற்செய்தி : மாற்கு 2 : 13 - 17

அக்காலத்தில் இயேசு மீண்டும் கடலோரம் சென்றார். மக்கள் கூட்டத்தினர் எல்லாரும் அவரிடம் வரவே, அவர் அவர்களுக்குக் கற்பித்தார். பின்பு அங்கிருந்து அவர் சென்றபோது அல்பேயுவின் மகன் லேவி சுங்கச்சாவடியில் அமர்ந்திருந்ததைக் கண்டார் அவரிடம், ”என்னைப் பின்பற்றி வா” என்றார். அவரும் எழுந்து இயேசுவைப் பின்பற்றிச் சென்றார். பின்பு அவருடைய வீட்டில் பந்தி அமர்ந்திருந்தபோது வரிதண்டுபவர்கள், பாவிகள் ஆகிய பலர் இயேசுவோடும் அவருடைய சீடரோடும் விருந்துண்டனர். ஏனெனில் இவர்களுள் பலர் இயேசுவைப் பின்பற்றியவர்கள். அவர் பாவிகளோடும் வரிதண்டுபவர்களோடும் உண்பதைப் பரிசேயரைச் சார்ந்த மறைநூல் அறிஞர் கண்டு, அவருடைய சீடரிடம், ”இவர் வரிதண்டுபவர்களோடும் பாவிகளோடும் சேர்ந்து உண்பதேன்?” என்று கேட்டனர். இயேசு, இதைக் கேட்டவுடன் அவர்களை நோக்கி, ”நோயற்றவர்க்கு அல்ல, நோயுற்றவருக்கே மருத்துவர் தேவை. நேர்மையாளர்களை அல்ல, பாவிகளையே அழைக்க வந்தேன்” என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் பாவிகளோடு விருந்துண்ணும் இயேசுவைப் பார்க்கிறோம். வரிதண்டும் லேவி யூத சமூகத்தால் வெறுக்கப்பட்டவர் இயேசு அவரைத் தம் பணிக்காக அழைத்ததின் பேரில் மாபெரும் ஒழுக்கமில்லாத செயலைச் செய்வதாக பிற யூதர்கள் சிறப்பாக யூத சட்ட வல்லுனர்கள் பார்த்தார்கள். இதனால் எழும் சமூக பிரச்சனையைப் பற்றி இயேசு கவலைப்படவில்லை. இயேசு பணிகளுக்காக வந்தார். பாவியை அழைத்த போது அடையாளமாக அதைத்தான் நிருபிக்கின்றார். லேவியோ, இயேசுவைப் பின்பற்றுவதால் ஏற்படும் ஆபத்தையோ சமூகத்திற்கு ஏற்படப்போகும் விளைவுகளைப்பற்றியோ கவலைப்படவில்லை இயேசுவில் ஒரு மாபெரும் மீட்பரைக் காண்கிறார். யேசுவோ லேவியிடம் ஒரு சீடனை, ஒரு அப்போஸ்தலரை, ஒரு நற்செய்தி பணியாலரை, மற்றும் ஒரு நற்செய்தி எழுத்தாழரைப் பார்க்கிறார். நம்மிடமும் இயேசு நாம்பாவியாக இருந்தாலும் “பக்குவம் கொண்ட இறைவனின் சாயல் தரித்தவர்களாக “பார்க்கிறார் அது தான் இறைவனின் புகழும் கூட .